REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 24உ திங்கள் (9—12—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 25உ செவ்வாய் (10—12—57) [இதழ் 152

பெருஞ்செலவில் பிரும்மாண்ட மாளிகைகள்

காங்கிரசாரின் வீண்செலவிற்குக் கண்டனம்

புதிய தலைநகர்களில் பிரும்மாண்டமான மாளிகைகளை சர்க்கார் அலுவலகங்களுக்காக பெரும் செலவில் எழுப்புவது வெறும் வீண்செலவு என்றும், பல மாநில சர்க்கார்கள் இந்த வீண்செலவுப் போக்கைக் கைக்கொண்டிருப்பது கண்டிக்கத் தக்கது என்றும் டெல்லிப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வி. கே. ஆர். வி. ராவ் தெரிவித்திருக்கிறார்.

'இந்தித் திணிப்பு விவேகமற்றது; வெறும் பிடிவாதம்'

(4-ம் கலத் தொடர்ச்சி)

களையும், வேற்றுமைகளையும் மறக்காமலிருந்தால் — நாம் அறிவாளிகளாயிருந்தாலும் — முன்னேற முடியாது.

"நான் இதைத் திரும்பத் திரும்பச் சொல்லுவதற்குக் காரணம், நமது பலவீனமும், முட்டாள்தனமும்தான் நமது எதிரிகள் என்பதை நீங்கள் உணரவேண்டுமென்பதுதான்

"எனவே, நாம் தெரிந்து கொள்ள வேண்டிய முதல் பாடம் ஒற்றுமை—இந்தியாவின் ஒற்றுமை. நம்மை வேறுபடுத்துகிறவை எல்லாம்—தீயன; நம்மை ஒன்றுபடுத்துகிறவை எல்லாம்—நல்லவை; இதைத்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்."

'போராட்டத்தை கைவிடக்கூடாது'

மீண்டும் ஆச்சாரியார் எச்சரிக்கை

சென்னை, டிச. 9—

இந்தியை, ஆங்கிலத்திற்குப் பதிலாகத் திணிப்பது விவேகமற்றது—பிடிவாதமானது; நியாயம், நேர்மை இவற்றிற்காகவும், ஆங்கிலம் தொடர்ந்து நீடித்தாக வேண்டும்.

"இந்திக்கு எதிரான போராட்டத்தை, போராட்டம் நடத்துவதற்கு முன்பாகவேதாம் விட்டுவிடக் கூடாது.

"இப்போதோ அல்லது எதிர்காலத்திலோ, இந்தியை, ஆங்கிலத்திற்குப் பதிலாகக் கொண்டுவருவது, இந்தியாவை மற்றுமோர் முறை துண்டாடுவதற்குத்தான் உதவும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

"இந்திக்கு எதிரான போராட்டத்தை நாம் கைவிட்டுவிடக் கூடாது என்று வற்புறுத்த விரும்புகிறேன்"

—என்று, திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள், நேற்று சென்னைக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தேசத் துரோகம்—பைத்தியக்காரத்தனம்

சகியோம்! அனுமதியோம்!

பெரியாரின் கிளர்ச்சி பற்றி பண்டிதர் உதிர்த்த 'முத்து'க்கள்

சென்னை, டிச. 9—

கீழ்ப்பாக்கத்து மேடையில் நின்றுகொண்டு பண்டித நேரு, பெரியார் அவர்கள் நடத்திய திராவிட கழகத்தின் அரசியல் சட்டப் புத்தக எரிப்புக் கிளர்ச்சியைக் கண்டிப்பதாகக் கருதிக்கொண்டு வசைமாரி பொழிந்திருக்கிறார், கடந்த சனியன்று!

பாருக்கெல்லாம் பஞ்சசீல உபதேசம் செய்யும் பண்டிதர், கீழ்ப்பாக்கத்து மேடையேறியதும், 'இவை எல்லாம் துரோகத்தனம்—தேசத் துரோகம்—பைத்தியக்காரத்தனம்' என்று, 'பொன்மொழி'களாக உதிர்த்திருக்கிறார்!

ஆத்திரத்திற்கு அடிமையாகி, உணர்ச்சிமேலிட்டு அவர் பேசியதாக, பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

பேசியதைக் கேளுங்கள்:—

"அரசியல் சட்டத்தை எரிக்க வேண்டும்—கொடியை எரிக்க வேண்டும் என்று இங்கு ஒரு இயக்கத்தின்—திராவிடர் கழகத்தின் தலைவர் பேசிவருவதாக எனக்குத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

"இதெல்லாம் என்ன? எவ்வளவு பெரியவராலுைம், உயர்ந்தவராலுைம் இப்படி எல்லாம் பேசுவதற்கு என்ன துணிச்சல்? இந்த நாட்டில் உள்ள துரோகிகளை அடக்கமுடியாதபடி நாம் என்ன, அவ்வளவு தாழ்ந்துவிட்டோமா? அவ்வளவு பலவீனர்களாகிவிட்டோமா?

"யாராவது பைத்தியக்காரன் இப்படிப் பேசினால், நான் அதைப் புரிந்துகொள்ள முடியும்.

"அவர் (அந்த இயக்கத்தின் தலைவர்) ஒரு பைத்தியக்காரரானால், பைத்தியக்கார விடுதியில் அவரை அடையுங்கள்.

"எவராவது இந்தியாவின் சுதந்தரத்தை, கொடியை, அரசியல் சட்டத்தை சவாலுக்கழைத்தால் — அவர் முதியவரோ இளைஞரோ—அது, துரோகமாகும்; அது, துரோகத்தனமாகவே நிச்சயமாகக் கருதப்படும். அது, சென்னை நகருக்கோ மாநிலத்திற்கோ மட்டும் தரப்படும் அறைகூவல் அல்ல—அது, இந்தியா முழுமைக்கும் தரப்படும் அறைகூவல். என்ன நேர்ந்தாலும், இந்தியா இதனைச் சகித்துக் கொள்ளாது.

"சாதியை ஒழிக்கிறேன் என்ற பெயரில் கொலைப் பிரச்சாரம் நடைபெறுவதும், அதனைப் பலர் கேட்பதும் பைத்தியக்காரத்தனம்; வேறென்ன?

"நாம் எந்த யுகத்தில் வாழுகிறோம், இதனைச் சகித்துக் கொள்ள!

கொலைப் பிரச்சாரம் நடைபெறுவதையும், துரோகத்தனம் செய்வதையும் நாம் சகித்துக்கொள்வதற்கு இல்லை.

"இந்தியாவுக்கு எதிராகப் பெரிய அணுகுண்டு, நீர்வளிக் குண்டு வைத்திருக்கிற பெரிய வல்லரசுகள் மிரட்டினாலும்கூட நாம் அஞ்சப்போவதில்லை — பணியப் போவதில்லை என்றால், இந்தியாவிற்குள்ளேயே ஒரு தனி நபர், இப்படிப் பேசுவதை எப்படிச் சகிப்பது? அவருக்குப் பணிந்துவிடுவோமா?

"இந்தியாவின் கௌரவத்திற்கு இவை பெரும் தீங்கிழைப்பவை—கௌரவத்தைப் பாதிப்பவை. இந்தியாவின் கௌரவம் என்பது ஒன்றும் கிள்ளுக்கீரையல்ல — நினைத்தவரெல்லாம் புண்படுத்துவதற்கு!"

கழக இலட்சியம்: பண்டிதர் மதிப்பீடு

பழைய கண்ணோட்டத்தில் மாற்றம் இல்லை

வடநாட்டு ஏகாதிபத்தியம் என்ற பேச்சு முட்டாள்தனமானதாம்

அறிவாளிகளும் இதில் ஈடுபட்டிருப்பது ஆச்சரியமாயிருக்கிறதாம்

வழக்கமான வசைச் சொற்களை வாரி இறைக்கிறார் நேரு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியத்தை மதிப்பிடும் கண்ணோட்டத்தை, தான் மாற்றிக்கொள்ளவில்லை என்பதை பண்டித நேரு, நேற்று திண்டுக்கல் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

'முட்டாள்தனம்' என்ற தனது பழைய கண்ணோட்டத்திலேயே நமது இலட்சியத்தை மதிப்பிட்டு, அவருக்கு வழக்கமாகிவிட்ட வசைச் சொற்களை வாரி இறைத்திருக்கிறார்.

ஒரு விசேடம்—புதுமை—மாற்றம் என்னவென்றால், "வடநாடு—தென்னாடு என்று பேசுவது, தென்னாட்டின்மீது வடநாட்டின் ஆதிக்கம் என்று பேசுவது முட்டாள்தனமானது என்றாலும் இந்த இலட்சியத்தைக் கொண்டவர்களில் பல அறிவாளிகளும் இருப்பது தனக்கு ஆச்சரியமூட்டுகிறது" என்று அவர் ஒப்பியிருப்பதுதான்.

வடநாடு—தென்னாடுபற்றி, திண்டுக்கல் கூட்டத்தில் பண்டிதர் உதிர்த்த 'முத்து'க்களை, இங்கே கோர்த்துத் தருகிறோம்:-

"சமீப காலமாக, **புதிய** கூச்சல் ஒன்று—முக்கியமாகத் தென்னாட்டிலிருந்து எழும்புகிறது—வடநாட்டு ஏகாதிபத்தியம்; இந்தி ஏகாதிபத்தியம்; தென்னாட்டின்மீது ஆதிக்கம் செலுத்த வடநாட்டின் முயற்சி—என்ற கூச்சல்; இது குழப்பமூட்டி, நாட்டைப் பிரிக்க மேற்கொள்ளப்படும் முயற்சியின் மற்றொரு திரிபு.

"வடநாட்டில் பல நல்லவர்கள் இருக்கின்றனர்; அதேநேரத்தில், சில போக்கிரிகளும் இல்லாமல் இல்லை; அவர்கள் சில தவறான—முட்டாள்தனமானவற்றைப் பேசுகிறார்கள்; ஆனால், தென்னாட்டிலும் பல நல்லவர்கள் இருந்த போதிலும், சில போக்கிரிகளும் இருக்கத்தான் செய்கின்றனர்.

"இன்று இந்தியாவில் உள்ள நாம், உலகத்தில் எந்த ஒரு குறிப்பிட்ட நாட்டுடனும் சண்டையிட்டுக் கொண்டிருக்கவில்லை. நமது பிரச்சினைகளுக்கு எதிராகவே போராடிக் கொண்டிருக்கிறோம் என்பதைக் கொஞ்சம் அறிவு படைத்தோர் அனைவரும் அறியமுடியும்.

"இன்றைய உலகம் வேகமாக மாறிக் கொண்டிருக்கிறது. அணுசக்தி, அணுகுண்டு, ஸ்புட்னிக், செயற்கைச் சந்திரன்—இப்படிப் பல புதிய கண்டுபிடிப்புகளும், புதிய சக்திகளும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. நாம் ஒரு கடினமான உலகில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நாம் ஒன்றுபட்டு உறுதியுடனில்லாவிட்டால் தோற்றுப்போய் விடுவோம்.

"இப்படி இருக்கையில், வடநாட்டு ஏகாதிபத்தியம், தென்னாட்டு ஏகாதிபத்தியம் என்று பேசுவதுவடநாட்டுமுட்டாள்தனம் அல்லது தென்னாட்டு முட்டாள்தனம் என்பதைத தவிர, வேறில்லை என்பதை சிற்றறிவு படைத்தோரும் தெளிவாக உணர முடியுமே! இப்படிப் பேசுவது முட்டாள்தனம் என்பதைத் தவிர வேறில்லை. இந்த முட்டாள்தனத்தில், சில அறிவாளிகளும் ஈடுபட்டிருப்பது கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன்.

"இந்தியாவின் சரித்திரத்தைப் படித்துப் பாருங்கள்; பேரறிவாளர்கள், மன்னர்கள், வீரர்கள் இருந்திருக்கிறார்கள்; இருந்தென்ன? நாம் ஏன் வீழ்ந்தோம்; பல பேரறிவாளர்கள் இருந்தும், நம்மிடையே ஒரு பலவீனம் இருந்தது; நாம், நமக்குள்ளேயே ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தோம். நாம் ஒன்றுபட்டு இருக்கவில்லை; ஆனால், ஒருவருக்கொருவர் வெகு சுலபமாகச் சண்டையிட்டுக்கொண்டோம்; உலகத்தின் இதர பாகத்தினர் முன்னேறிய போது நாம் பின்தங்கிவிட்டோம். எனவே, நாம் இன்னும் அந்தப் பழைய சண்டை

(1-ம் கலம் பார்க்க)

இந்தியைத் திணிக்கிற பிரச்சினையே இல்லையாம்!

நிர்ப்பந்தம் இல்லாமலே மொழிப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமாம்

பொதுக்கூட்டத்தில் பண்டிதரின் மாய்மாலம்

"அச்சுறுத்தியோ, கட்டாயப் படுத்தியோ இந்தியைத் தென்னாட்டின் மீது திணிக்கும் நோக்கம் எவருக்கும் இல்லையாம்!

காந்தி கிராமக் கூட்டத்தில் இவ்வாறு குறிப்பிட்ட பண்டிதர், மேலும் கூறியதாவது:—

"இதர மக்கள்மீது வடநாட்டவர் இந்தியைத் திணிக்க விரும்புவதாகச் சிலர் நினைக்கிறார்கள். சிலர், ஆத்திரப்பட்டு எழுதுகிறார்கள்; கூச்சல் போடுகிறார்கள். நான் சொல்ல விரும்புகிறேன்—எவர் மீதும் எந்த மொழியையும் திணிக்கிற பிரச்சினையே இல்லை; அப்படிப் பிரச்சினை இருக்கமுடியாது. திணிக்காமல், நிர்ப்பந்தம், கட்டாயம் செய்யாமல் இதுபற்றி நாம் முடிவு செய்தாக வேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்கு நாம் சிநேக பாவத்துடன், பரஸ்பர நலன் கருதி கூட்டுறவுமுறையில் தீர்வு காணவேண்டும்."

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 9—12—57 திங்கள்

‘சமதர்ம வடிவ’ அவலட்சணம்!

2,200 தொழிலாளர்கள் வெளியே விரட்டப்பட இருக்கிறார்கள்.

இப்பொழுதும், அவர்கள் அனைவரும் ஆலையில் வேலை செய்தும், வேலை செய்யாதவர்கள் நிலையில்தான் வேதனையுடன் இருந்து வருகின்றனர்.

இன்றும், அவர்கள் வாழ்வில் வாட்டமும் வறுமையும் கோரத்தாண்டவம் போட்டுவருகின்றன.

அவர்கள் வாழ்வில் நுழைந்து பயங்கர விளையாட்டு விளையாடி வரும் துன்பம், இனி அதை நிலையானதாக அமைத்துக் கொள்ளப்போகிறது.

இத்திங்கள் எட்டாந் தேதியுடன் ஆலை மூடப்பட்டுவிடும் என்ற, 2,200 தொழிலாளர்களின் குடும்பத்தில் கொள்ளி வைக்கும் கொடும் அறிவிப்பு, ஆலையில் தொங்கிக்கொண்டு இருக்கிறது.

இந்த அறிவிப்பைக் கண்ட அன்றே, அந்தத் தொழிலாளர்கள் இதுவரை நடைப்பிணங்களாக மாறாது இருந்திருப்பரேயானால், நடைப்பிணங்களாகத் திருக்கோலம் கொண்டுவிட்டிருப்பர்.

ஆலை மூடப்படும் என்ற அந்தப் பயங்கர அறிவிப்பு, அவர்கள் எதிர்கால வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

சோகச் சம்பவம்! நமது இதயத்தை எல்லாம் ஆயிரங் கண்களாகத் துளைத்திடத்தக்க அதிபயங்கர சம்பவம்.

உற்பத்தி பெருக்கம், மிகுதியான ஏற்றுமதி, தொழில் நிர்மாணம் என்றெல்லாம் விநாடியும் தவறாது, நாடாள வந்தவர்களால் வெளிநாடுகளிலும், வானொலியிலும், மன்றங்களிலும், முச்சந்திகளிலும், வெளிநாட்டு விருந்தினர் சந்திப்புகளிலும், இடத்துக்கேற்ப இரைந்தும், ஒலி குறைந்தும் பேசப்பட்டுவரும் இந்த நேரத்தில், 2,200 தொழிலாளர் ஆலையிலிருந்து வெளியே விரட்டப்பட இருக்கின்றனர் என்ற துக்கச் சேதி நமக்குத் தரப்படுகிறது.

8-ந் தேதி சூளை மில் இறுதியாக மூடப்பட இருக்கிறது.

தொழிலாளர் எதிர்கால வாழ்வை மாய்த்திடும் இந்த அறிவிப்பை, ஆலைக் கதவுகள் தாங்க முடியாமல் தாங்கிக் கொண்டு இருக்கின்றன.

அந்த ஆலையில், பேராசு அமைச்சர் கூறியுள்ளபடி 2,200 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

ஆனால் தொழிலாளர்களோ, 3,000 தொழிலாளர்கள் அந்த ஆலையில் பணிபுரிந்துவருவதாகக் கூறுகின்றனர்.

மொத்த எண்ணிக்கை எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆலை மூடப்படப் போகிறது — தொழிலாளர்கள் வீதியிலே விரட்டப்பட இருக்கின்றனர் என்பது உறுதியானதாகும்.

அந்த ஆலையை நடத்திவருகிறவர்கள் வடவர்! ‘எட்வர்ட் டெக்ஸ்டைல் மில்ஸ்’ என்ற நிறுவனம், மூடப்பட இருக்கும் சூளை மில்லை நிர்வகித்து வருகிறது.

அங்கச் சூளை ஆலையின் நிர்வாகத்திற்கும் — தொழிலாளர்களுக்கும் இருந்துவந்த தொடர்பையும், தொழிலாளர்கள் நடத்தப்பட்டுவந்த விதத்தையும், சென்னை அரசாங்கத்தின் அலட்சியப் போக்கையும் விளக்கிக் கூறும் நண்பர் கடிதம் ஒன்றை நாம் ஏற்கனவே வெளியிட்டு இருக்கின்றோம். அக்கடிதத்தில் உள்ள அப்பகுதியை இங்கு தருகிறோம்:—

“சென்னை நகரில் சூளையில் ‘எட்வர்ட் டெக்ஸ்டைல் மில்ஸ்’ என்ற ஒரு துணி—நூற்பு ஆலை வடவரால் நடத்தப்பட்டு வருகிறது. சுமார் 3,000 தொழிலாளர்கள் ஊழியம் செய்துவரும் ஒரு ஆலை இது. இந்த ஆலை 1956-ம் ஆண்டு சூலை திங்களிலிருந்து செயல்பட்டுவருகிறது. அங்கே இரண்டு முறை(ஷிப்டு)வேலை செய்யப்படுகிறது. முதல் வேலை (ஷிப்டு) நேரத்தில் வேலை செய்யும் ஒரு தறித் தொழிலாளிக்கு அவன் தாங்கொணாத அளவுக்கு 4 தறிகள் கொடுக்கப்படுகின்றன. நூற்புத் துறையில் ஊழியம் செய்யும் ஒரு தொழிலாளருக்கு 2 மெஷின் கொடுக்கப்படுவதுடன், பக்கவாட்டிலும் பார்த்து வேலை செய்ய வேண்டும்; இது, தொழிலாளிக்கு இரட்டிப்பு வேலையாகும்.

“ஒரு கூலித் தொழிலாளருக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 42—4—0; வேறு எவ்வித கிராக்கிப்படியோ, நோயின் காரணமாக விடுமுறையோ, பண்டிகை, திருவிழா போன்ற நாட்களுக்கு விடுமுறையோ கிடையாது. இலாபத்தில் முதலாளி, தொழிலாளிக்கு ரூ. 100—100 என்ற விகிதம் கொடுக்கும்படி சட்டம் கூறுகிறது; ஆனால் அவ்வடவர்கள், சில ஏமாந்த தமிழக அதிகாரிகளை வலையில் போட்டுக்கொண்டு, ‘உற்பத்தி’ என்ற பெயரால் 100·75 பாகம் தான் தொழிலாளருக்குத் தருகின்றனர். அத்தனைத் தொழிலாளிகளும் தற்காலிகமாம்; ஆலை துவங்கிய 1½ ஆண்டுக் காலத்துக்குள் நான்கு தடவைகள் வேலை நிறுத்தம் நடந்திருக்கிறது; நான்காம் தடவை வேலை நிறுத்தம் 1½ திங்கள் நீடித்தது. அவ்வாறு நீடித்தும் எங்கள் கோரிக்கை நிறைவேறவில்லை.”

இப்பொழுது ஆலையே மூடப்படுகிறது.

ஆலை மூடப்படுவதற்கு நிர்வாகம் கூறும் காரணம், பணம் நஷ்டம்—உற்பத்தி குறைவு என்பதாகும் என்று, மக்கள்சபையில் அமைச்சர் அறிவித்துள்ளார்.

“ஆலையை மூடுவதற்கு நிர்வாகம் கூறும் காரணத்தின உண்மையைக் கண்டறிய பேராசு முன்வருமா?” எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு, ‘அத்தகு ஆராய்ச்சியால் விளையப்போகும் நற்பயன் எதுவும் கிடையாது’ என்று அமைச்சர் அறிவித்துள்ளார்.

ஆலை முதலாளியின் வாக்கில் அவ்வளவு அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கின்றார், பேராசு அமைச்சர்!

சமதர்ம வடிவ அமைப்பில், ஆளவந்தார்களுக்கு இத்தகு மனப்போக்குத்தான் இன்றியமையாத் தேவை போலும்!

“ஆலையை மூடுவதால் வேலையிழக்கும் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை தரப்படுமா?” என்ற வினா போடப்பட்டிருக்கிறது. அதற்குப் பொருத்தமான பதிலைக் கூறாது, ‘தொழில் தகராறு சட்டத்தின்படி தரப்படக்கூடிய நஷ்டஈடு தொழிலாளர்களுக்குத் தரப்படலாம்’ என்று பேராசு அமைச்சர் திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

வாழ்க—பல்லாண்டு வாழ்க, பண்டிதரின் சமதர்ம வடிவ ஆட்சி அமைப்பு!

வேலையிழக்கப்போகும் தொழிலாளர் நிலைகண்டு நாம் துடிக்கின்றோம் — துக்கிக்கின்றோம். இந்தச் சூழ்நிலையில் இந்த ஒன்றைத் தவிர, நாம் வேறு என்ன செய்யவல்லோம்?

சரணடைவதுபற்றி பேச்சுவார்த்தைக்கு இணங்குக!

மலேயா கம்யூனிஸ்டுகளுக்கு பிரதமர் இறுதி எச்சரிக்கை

கோலாலம்பூர், டிச. 6—

மலேயா காடுகளில் தலைமறைவாயிருந்துகொண்டு கொரில்லாப்போர் நடத்திவரும் கம்யூனிஸ்டுகளுக்குப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் இறுதி எச்சரிகை தந்திருக்கிறார்.

டிசம்பர் 31-ந் தேதிக்குள் சரணடைவது பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு அந்தக் கம்யூனிஸ்டுகள் தயாராயிருக்க வேண்டுமென அவர் அறிக்கை ஒன்றில் கூறியிருக்கிறார்.

கடந்த நவம்பர் 8-ந் தேதியன்று தான், கம்யூனிஸ்டு கட்சி செயலாளரான சின் பெங் என்பாருக்கு எழுதிய கடிதத்தில், சரணடைவது பற்றி கம்யூனிஸ்டுகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த—உண்மையில் சண்டையைக் கைவிட சின் பெங் தயாரானால், தான் தயாராக இருப்பதாக எழுதியதாகவும், இன்று வரை அவர்களிடமிருந்து பதில் இல்லை என்றும், எனவே, டிச. 31-ந் தேதிக்குள் பேச்சுவார்த்தைக்கு நாள் குறித்தாக வேண்டும் என்றும் துங்கு எச்சரித்திருக்கிறார்.

சுமார் 1,800 கம்யூனிஸ்டுகள் காடுகளில் ஒளிந்து நின்று சண்டையிட்டு வருவதாக சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

உண்மையாகவா ?

மாஸ்கோ, டிச. 6—

ரஷ்யாவின் அணுசக்தியோடு கூடிய இலக்குத் தாக்கிகள், ஒரே யடியில், ஒரு விமானத்தை மட்டுமல்ல—எவ்வளவு உயரத்தில் எத்தனை விமானங்கள் அணிவகுத்துச் சென்றாலும் தாக்கி அழிக்கும் சக்தியைப் பெற்றுள்ளதாகச் செய்தி தரப்பட்டிருக்கிறது.

‘காசர்கோடு தாலுகா பகுதிகள் மைசூருடன் இணைய வேண்டும்’

கோபாலன் தந்த உறுதிமொழி என்ன ?

பண்டித பந்திடம் மைசூர் எம்.பி.-க்கள் முறையீடு

புதுடில்லி, டிச. 4—

காசர்கோடு தாலுகாவில், மஞ்ஜேஸ்வர், கும்ளா பிர்க்காக்கள் மைசூர் மாநிலத்திற்கு உடனடியாக மாற்றப்படவேண்டும் என்றும், எஞ்சிய காசர்கோடு தாலுகாவின் எதிர்காலம்பற்றி நிர்ணயிக்க ஒரு விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என்றும் மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர் சிலர், உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் அவர்களைச் சந்தித்து முறையிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பி. சிவராவ், கே. ஆர். ஆச்சார், எச். சி. தாசப்பா, பி. சி. நஞ்சுண்டையா, பி. பி. பாசப்பா ஷெட்டி ஆகியோர் பண்டித பந்தினைச் சந்தித்திருக்கின்றனர்.

அடுத்தாற்போல, கொண்டுவரப்படவிருக்கும் மாநிலப் புது அமைப்புத் திருத்தச் சட்டத்திலேயே இந்த மாற்றம் நிகழ வேண்டுமெனவும் அவர்கள் வற்புறுத்தியதாகத் தெரியவருகிறது.

இந்த பிர்க்காக்களில் உள்ள பஞ்சாயத்து சபைகள், மாற்றம் கோரி தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாகவும், பொதுத் தேர்தல் காலத்தில், கம்யூனிஸ்டு தலைவர் கோபாலன் இந்த ஏற்பாட்டினை ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், காங்கிரஸ் பொதுச்செயலாளராயிருந்த மல்லையாவிற்கு, மலபார் பிரதேச காங்கிரஸ் கமிட்டி தலைவர் கோவிந்த நாயர் எழுதிய கடிதம் ஒன்றில்; தங்களின் இந்தக் கோரிக்கையை ஆதரித்திருப்பதாகவும் அந்த எம். பி.-க்கள் பண்டித பந்திடம் சுட்டிக்காட்டியதாகத் தெரிகிறது. அக்கடிதத்தின் போட்டோ நகல் ஒன்றையும் அவர்கள் மந்திரியிடம் தந்துள்ளனராம்.

தேயிலை ஏற்றுமதிப் பிரச்சினையில் கவலைதரும் நிலைமை இல்லையாம்!

அபிவிருத்தி செய்ய முயற்சிக்கிறார்களாம்!

புதுடில்லி, டிச. 6—

“இந்தியாவிலிருந்து 1957 சனவரி—செப்டம்பர் கால அளவில் ஏற்றுமதியான தேயிலையின் அளவு இதற்கு முந்திய நான்கு ஆண்டுக்காலத்தில் ஏற்றுமதியான தேயிலையைவிட அதிகமாகக் குறையவில்லை” என்று, வர்த்தக மந்திரி நித்தியானந்த கனுங்கோ மக்கள் சபையில் தெரிவித்தார்.

“உடனடியாக எவ்வித விசேட நடவடிக்கையும் எடுக்கக்கூடிய அளவுக்குக் கவலை தரும் நிலைமை இல்லையாயினும், பொதுவாக ஏற்றுமதியை அபிவிருத்தி செய்ய இடைவிடாமல் முயற்சி செய்யப்பட்டு வருகிறது” என்றும் மந்திரி கூறினார்.

துவாரகா சங்கராச்சாரியார் அரசியல்!

நவசாரி, டிச. 7—

“நிலச் சீர்திருத்தச் சட்டங்களிலிருந்து மத நிறுவனங்களையும், தரும நிறுவனங்களையும் நீக்கவேண்டும்”

என்று சாரதா பீடாதிபதியான துவாரகா சங்கராச்சாரியார் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுடில்லி, டிச. 7—

“ஆந்திரா, பஞ்சாப்,—ஒரிசா ஆகிய மூன்று மாநிலங்களிலிருந்து மட்டுமே மத்திய அரசாங்கம் அரிசி கொள்முதல் செய்யத் திட்டமிட்டுள்ளது” என்று மக்கள் சபையில் உணவு இலாகா உதவி அமைச்சர் தாமஸ் தெரிவித்துள்ளார்.

‘ஆண்களைப்போலவே பெண்களுக்கும் சம வேலைக்குச் சம சம்பளம் வேண்டும்’

மக்கள் சபையில் தனி நபர் மசோதா

புதுடில்லி, டிச. 6—

ஒரே வேலைக்கு, பெண்களுக்கும் ஆண்களைப் போலவே சமமான சம்பளம் தரப்பட வேண்டுமெனக்கோரும் மசோதா ஒன்றினை, மக்கள் சபையில், திருமதி ரேணு சக்கரவர்த்தி கொண்டு வந்திருக்கிறார்.

சமவேலைக்கு சமசம்பளம் என்ற கொள்கை அரசியல் சட்டத்தில் இடம் பெற்றிருப்பதாக அவர் தனது மசோதாவில் கூறியிருக்கிறார்.

தொழில்நுணுக்க ஆசிரியர் ஊதிய உயர்வு

திட்டத்திற்கு ஊக்கம் தருமாம்

புதுடில்லி, டிச. 6—

அகில இந்திய அடிப்படையில் தொழில்நுணுக்கக் கல்லூரி ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்துவது சம்பந்தமான திட்டத்தை அகில இந்திய தொழில்நுணுக்கக் கல்வி இணைப்புக் குழு அங்கீகரித்துள்ளது.

இரண்டாம் திட்டத்திற்கு இந்த ஊதிய உயர்வு ஊக்கம் தரும் எனவும், தொழில்நுணுக்கப் பட்டதாரிகளுக்கு ஊதியம் உயர்த்துவது அவசியம் என்றும் இந்தக் குழு கருத்து தெரிவித்துள்ளது.

பண்டா சர்க்கார் மீது

நம்பிக்கையில்லாத் தீர்மானம்

கொழும்பு, டிச. 6—

இலங்கையில் கடந்த இருபது மாதங்களாகப் பதவியிலிருந்து வரும் பண்டார நாயகா சர்க்கார் மீது முதன் முதலாக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்று, வரும் மக்கள் சபைக் கூட்டத்தில் கொண்டுவரப்படுகிறது.

டிராட்ஸ்கி நவலங்கா சம சமாஜக் கட்சித் தலைவரான டாக்டர் என். எம். பெரிரா இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவாராம்.

நகரசபை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோது அதனைச் சமாளிக்க அருகதை பெற்றிருக்கவில்லை என்று கூறி சர்க்கார், 30 உறுப்பினர்கள் கொண்ட கொழும்பு நகரசபையைக் கலைத்ததைக் கண்டிக்கும் நோக்குடன் தீர்மானம் கொண்டுவரப்படுகிறது.

‘நகரசபையைக் கலைத்தது தேவையற்றது — சனநாயக விரோதமானது’ என்று, பெரிரா தெரிவித்திருக்கிறார்.

101 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் பெரிரா கட்சிக்கு 14 பேர்கள்தான் இருக்கின்றனர்.

பண்டமாற்று வர்த்தகம்

ஜப்பானுடன் ஒப்பந்தம்பற்றி மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, டிச. 6—

"இந்திய இரும்புக் கனிக்குப் பதிலாக மூலதனச் சரக்குகளை அனுப்பிவைப்பது சம்பந்தப்பட்ட பண்டமாற்று ஒப்பந்தம் பற்றி ஜப்பானிய சர்க்கார் யோசனை எதுவும் தெரிவிக்கவில்லை" என்று மாநிலங்கள் சபையில் தெரிவிக்கப்பட்டது.

"ஆனால், அரசாங்க வர்த்தகக் கார்ப்பரேஷன் இரண்டு தனித் தனி ஒப்பந்தங்களை செய்து கொண்டிருக்கிறது என்றும், அவைகளில் ஒன்று இந்திய இரும்புக்கனியை ஏற்றுமதி செய்வதற்காக ஜப்பானிய உருக்கு ஆலைகளுடனும், மற்றொன்று, துணி இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்வதற்காக ஜப்பானியத் துணி இயந்திர சாதனத் தயாரிப்பாளர் சங்கத்துடனும் செய்து கொள்ளப்பட்டிருக்கின்றன" என்று கூறப்பட்டிருக்கிறது.

பிற்பட்ட வகுப்பினர் வாழ்க்கை நலம்

பல்வேறு திட்டங்களுக்கு ரூ. 25 கோடி அனுமதியாம்

புதுடில்லி, டிச. 6—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பிற்பட்ட வகுப்பினரின் வாழ்க்கை நலனுக்காக இந்திய சர்க்கார் நடத்தும் பல்வேறு திட்டங்களுக்கும் ரூ 25 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்! அதில் ரூ. 9-கோடிக்குமேல் 1956-1958 கால அளவுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறதாம்.

'இத்திட்டங்கள், குடியிருப்பு வசதி, காலனி அமைப்பு, குடி தண்ணீர் வசதி, மருத்துவ-பொது சுகாதாரம், விவசாய வசதிகள், கூட்டுறவு, செய்திப் போக்குவரத்து, தொழில் நுட்பப் பயிற்சி நிலையங்கள் ஆகியவை சம்பந்தப்பட்டவையாகும்" என்று மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

போலந்து நாட்டில் மீண்டும் கலகம்?

வார்சா, டிச. 6—

மேற்கு போலந்து நகரம் ஒன்றில் சுமார் 3,000 பேரடங்கிய கூட்டம் ஒன்று கலகத்தில் ஈடுபட்டதாகவும், கூட்டத்தைக் கலைப்பதற்காக போலீசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்ததாகவும், எண்ணற்றோர் கைது செய்யப்பட்டதாகவும் வார்சா வானொலி அறிவித்திருக்கிறதாம்.

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பெண் ஒருத்தியை, போலீஸ் கார் ஒன்று மோதி கீழே விழ்த்தியதைத் தொடர்ந்து போஜ்ஜன் மாகாணத்திலிருக்கும் அந்த நகரில் கலவரம் மூண்டதாகவும் வானொலி அறிவிப்பு கூறுகிறதாம்.

இதற்கு முனபு கடைசியாக பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட கலகம், வார்சா நகர வீதிகளில் கடந்த அக்டோபரில் ஏற்பட்ட கலகமாகும்.

காங்கிரஸ் ஆட்சியில் சமூகத் தீமைகள்!

தனி நீதிமன்றம் ஏற்படுத்த டெல்லி முடிவு

"குழந்தைத் திருமணங்களைத் தடுக்கவும், விபசாரம், உணவுக் கலப்பு, வரதட்சணை போன்ற சமூகக் குற்றங்கள் இவைகளை மட்டும் விசாரிக்கத் தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்தவும் மத்திய அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது" என்று, மத்திய சட்ட அமைச்சர் சென், மக்கள்சபையில் தெரிவித்துள்ளார்.

கதவடைப்பால் வேலையிழந்தோர்

10000 பேருக்கு மேற்கு வங்கத்தில் மாற்று வேலை

"கடந்த ஓராண்டில் மட்டும் மேற்கு வங்க மாநிலத்தில் நிதிக் கஷ்டம் காரணமாக 10,000 பேருக்கு வேலையளித்துக் கொண்டிருந்த ஆறு சணல் ஆலைகள் மூடப்பட்டுவிட்டன" என்று, மாநில தொழிலாளர் மந்திரி எ. சத்தார், சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், வேலையிழந்த தொழிலாளருக்கு, சம்பந்தப்பட்ட ஆலை நிர்வாகிகள் மாற்று வேலை தேடித் தந்துள்ளனர் என்றும், வேலை கிடைக்காதவர்களுக்கு நஷ்டஈடு தரப்பட்டிருக்கிறது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பீடித் தொழிலாளர் வேலை நிலைமை

தனிச் சட்டம் தேவையில்லை என்கிறார் அமைச்சர்

புதுடில்லி, டிச. 7—

"பீடி, சுருட்டுத் தொழிலாளர்களின் வேலை நிலைமையை ஒழுங்குபடுத்தவேண்டும் என்று கோரி மக்கள்சபையில் கொண்டுவரப்பட்ட தனி நபர் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

அகில இந்திய அடிப்படையில் இயற்றப்பட்டுள்ள தொழிலாளர் பற்றிய சட்டங்களின் நன்மைகளை பீடி, சுருட்டுத் தொழிலாளர் அனுபவித்து வருகின்றனர்; எனவே, தனிச் சட்டம் தேவையில்லை" என்று தொழில் உதவி அமைச்சர் அபீத் அலி தெரிவித்துள்ளார்.

நாடு முழுமையிலும்

ஒரேமாதிரி விடுமுறை நாட்கள்

புதுடில்லி, டிச. 7—

இந்தியாவிலுள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும் ஊதியத்துடன் கூடிய தேசிய, திருவிழா விடுமுறைகள் ஒரேமாதிரியாக இருப்பதற்கு வகை செய்யும் தனி நபர் மசோதாமீது மக்கள் சபையில் விவாதம் நடைபெற்றது.

டிரைவர் இல்லாமல் தானே இயங்கும் இரயில்

ரஷ்யப் பரிசோதனை வெற்றியாம்!

மாஸ்கோ, டிச. 6—

டிரைவர் இல்லாமல் தானே இயங்கிச் செல்லும் கூட்ஸ் ரயில் ஒன்றை ரஷ்யத் தொழில் நுணுக்க நிபுணர்கள் பரிசோதனை செய்து வெற்றிபெற்று விட்டனராம்!

நன்கு கணித்து நிறுவப்பட்ட மின்னணு இயந்திரக் கருவியொன்று இதனை இயக்குகிறதாம்!

மாநிலங்களுக்கிடையே 'பஸ்' போக்கு - வரத்து

அனுமதி வழங்க நிறுவனமாம்

புதுடில்லி, டிச. 6—

மாநிலங்களுக்கிடையே பஸ் போக்கு - வரத்துக்கான 'ரூட்' அனுமதி வழங்க, மாநிலங்களிடையே பஸ் போக்கு-வரத்து நிறுவனம் ஒன்றை ஏற்படுத்த மத்திய அரசாங்கம் எண்ணியுள்ளதாம். இதை, மக்கள்சபையில் போக்கு-வரத்து அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி

சென்னை, டிச. 6—

1957 நவம்பர் 23-ம் நாளுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினரின் வாழ்க்கைச் செலவு 3 புள்ளி அதிகரித்து 393 ஆகியுள்ளது.

அரிசி, காய்கறி, தேங்காய் எண்ணெய் விலை ஏற்றமே இதற்குக் காரணம்.

பனியன் பேக்டரி

தொழிலாளர் கழக வெற்றி

திருப்பூர் 'ராம்ராஜ் நிட்டிங் கம்பெனி' நிர்வாகத்தினர், பனியன் பேக்டரி தொழிலாளர் கழக உறுப்பினர் தோழர் சண்முகம் அவர்களைப் பழிவாங்கும் நோக்கத்துடன் வேலையிலிருந்து நீக்கிவிட்டதை எதிர்த்து, மேற்படி கழகம் போராடி மேற்படி தோழரை வேலைக்கு எடுத்துக் கொள்ளும்படிச் செய்தது.

தொழிலாளர் கழகச் சார்பில் நடந்த பேச்சு வார்த்தையில் மேற்படி கழகப் பொறுப்பாளரும் தி.மு. கழகப் பொதுக்குழு உறுப்பினருமான தோழர் சு. துரைசாமி கலந்துகொண்டு வெற்றி தேடித் தந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரையில் முத்து அச்சகத் துவக்கவிழா

28—11—57 மாலை 4 மணியளவில், கழகக் கட்டிடத்தில், டாக்டர் அருணசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் அச்சகம் சீரும் சிறப்பும் பெற்று விளங்க வேண்டும் என்று வாழ்த்தி, 'சி. எம். வி.' பிரஸ் மேலாளர் திரு. வேணுகோபால், மதுரை நகர் மன்ற உறுப்பினர் திரு. எம். செல்லையா, திரு. டி. கே. சீனிவாசன் ஆகியோர் பேசினர். அச்சக உரிமையாளரும், மாவட்டத் தி. மு. க. செயலாளருமான தோழர் எஸ். முத்து அவர்கள் நன்றி கூறினர்.

விளந்தை ஆண்டிமடம் தி.மு.க. பொதுக்கூட்டம்

மதியழகன் கலந்துகொண்டார்

27—11—57 மாலை 6 மணியளவில், திரு. வி. க. திடலில், தி. மு. கழக முதலாவதாண்டு விழா தோழர் ஆர். தட்சிணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முன்னுரையில் கிராமங்களில், தி. மு. கழகம் பரவ வேண்டிய அவசியத்தையும், இந்தி வந்தால் கிராம மக்கள் எந்த அளவு எதிர்த்துப் போராட வேண்டுமென்பதையும் விரிவாக எடுத்துக் கூறினர்.

அடுத்து, தோழர் கணபதி ராமசுப்பையா, மாணவர்கள் கடமையைப் பற்றியும், தோழர் சி. ஜம்பு, ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டதை புள்ளி விவரங்களுடன் எடுத்துரைத்தும் புலவர் ஆறுமுகம் ஆதிதிராவிட மக்களுக்கு தி. மு. கழகம் செய்த தொண்டினை எடுத்துரைத்தும், பொன். சொக்கலிங்கம் தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியினர் சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க தி. மு. கழகத் தோழர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்த்து ஓட்டு அளித்தது பற்றியும், காங்கிரஸ் எம்.எல் ஏ.-க்கள் கைத்தறி நெசவாளர்களுக்குச் செய்த துரோகத்தையும் விளக்கிப் பேசினர்.

இறுதியாக தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் தி. மு. கழகம் இதுவரை செய்த தொண்டினையும், இதுவரை எத்தனைத் தோழர்களைப் பலி கொடுத்திருக்கிறதென்பதையும், ஆங்கில ஆட்சிக்கு முன் திராவிடம் யாருக்கும் அடிமைப்பட்டதில்லை என்பதை சரித்திர சான்றுகளுடனும் எடுத்துரைத்தார். தோழர் நடராசன் நன்றி கூறினர்.

மாலை 5 மணியளவில், தோழர் சி. ஜம்பு தலைமையில் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடந்தது. தேவாங்கர் வீதியில் ஜம்பு அவர்களால் கொடியும் ஏற்றப்பட்டது.

தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களுக்கு தண்டலை, திருக்களப்பூர், திருமுட்டம், கல்லாத்தூர் தி. மு. கழகங்களின் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன. ஆண்டிமடம் கைத்தறி நெசவாளர் சங்கச் சார்பிலும் கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டது.

சேலத்தில்

இளமுருகு, பொற்செல்வி

சேலம், டிச. 3—

சேலம் — பொன்னமாப்பேட்டை இரயில்வே கேட்டுக்கருகில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் ஒன்று 1—12—57 மாலையில் தோழர் ஜி. சுக்கூர் தலைமையில் நடைபெற்றது.

தோழர் இளமுருகு அவர்கள் பேசுகையில், பச்சைத் தமிழர் காமராசர் ஆட்சியில் நமக்கு நஷ்டம்தான் அதிகமாக ஏற்பட்டுவருகின்றது என்றும், மக்களுக்குச் சேவை செய்யவே தி. மு. கழகம் சட்டசபையில் பணியாற்றிவருகிறது என்பதை விளக்கியும், தி. மு. கழகத்திற்கு மென்மேலும் ஆதரவு அளித்து வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தோழியர் பொற்செல்வி பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆண்கள் மட்டும் போதாது; பெண்களின் உதவியும் தேவைப்படுகிறது. இம்மாதிரி கூட்டங்களுக்கு ஆண்கள் தங்கள் தாய், மனைவி, சகோதரி முதலியவர்களை அழைத்து வரவேண்டும். கூட்டத்தின் பேச்சுக்களை பெண்களும் கேட்டால்தான் அரசியல் தெரியும். 1938-ல் நடந்த இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பெண்களும் பங்குகொண்டிருக்கிறார்கள். தி. மு. கழகக் கொள்கைகளை பெண்கள் சரிவரத் தெரிந்துகொள்ளும்படி செய்தால் நாட்டின் விடுதலைக்காக வீட்டிற்கொரு ஆணை, பெண்களே அனுப்பிவைப்பார்கள். சமுதாய சீர்திருத்தம், நாட்டின் விடுதலைப் போராட்டம் ஆகியவற்றில் ஆண்களுக்கு நிகரான சமபங்கு பெண்களுக்கும் உண்டு. முன் காலத்தில் பெண்களை கோழைகளாக நடத்திவந்திருக்கிறார்கள். கண்ணகி போன்ற வீரமுள்ள பெண்களும் இருந்திருக்கிறார்கள். இக்காலத்துப் பெண்கள் கண்ணகிபோல் வீரமுள்ளவர்களாக விளங்கி நாட்டின் விடுதலைக்காகப் பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

சேலம் நகர தி. மு. கழகச் செயலாளர் ஈ. ஆர். கிருட்டினன், கே. ஏ. வெங்கடாசலம், கே. எஸ். மணி, எஸ். ஏ. அன்புக்கரசு, மாசிலாமணி ஆகிய தோழர்களும் பேசினர்.

பம்பாய் — கம்பாலாகில் தி. மு. கழகம்

வழியனுப்பு-வரவேற்புக்கூட்டம்

பம்பாய், டிச. 7—

கடந்த 30—11—57 இரவு 10 மணியளவில், ஆஜி அலி திடலில் கம்பாலாகில் தி. மு. கழகக் கிளையின் முன்னாள் செயலாளர் தோழர் வை. சுப்பையா அவர்களுக்கு ஓர் வழியனுப்புக் கூட்டம் தாராவி தி. மு. கழகச் செயலாளர் திரு. த. மு. பொற்கோ தலைமையில் நடைபெற்றது.

தாயகம் சென்று திரும்பிய தோழர் ஆரியசங்காரன் அவர்களுக்கு கிளையின் சார்பில் மலர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டது.

தாயகம் செல்லும் தோழர் சுப்பையா அவர்கட்கு கிளையின் சார்பில் மலர் மாலையும் கைத்தறி ஆடையும் அணிவிக்கப்பட்டன. கழகத் தோழர்கள் அன்னருக்கு திருவள்ளுவர் படம், புத்தகம் ஆகியன அன்பளிப்பு அளித்தனர்.

தோழர்கள் ஆரியசங்காரன், அன்பரசு, அண்ணமலை ஆகியோர் பாராட்டுரை வழங்கிய பின்னர் தோழர் சுப்பையா தனக்களிக்கப்பட்ட பாராட்டுக்கும், அன்பளிப்புக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

விமானியில்லாத வெடி விமானம் சோதனை

"விமானியில்லாமல் 5.000 மைல் தூரம் செல்லும் 'ஸ்னாக்' வெடிகுண்டு விமானம் நேற்றிரவு சோதனைக்காக அனுப்பப்பட்டது" என்று, அமெரிக்க விமானப் படை அறிவித்துள்ளது.

ஆசிரியருக்குக் கடிதம் :

பர்மாவாழ் தமிழர் படும்பாடு

ஐயா,

கடல் கடந்து வாழும் தமிழ் மக்களுக்கு—குறிப்பாக பர்மிய நாட்டில் வாழும்—இனத்தால் திராவிடர்களாகவும், மொழியால் தமிழர்களாகவும் உள்ள எங்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் துயரங்கள்—இன்னல்கள் ஏராளம்! ஏராளம்!!

தற்சமயம் பர்மிய அரசாங்கத்தால், வெளிநாட்டவர்களின் மீது போடப்பட்டிருக்கும் சட்டதிட்டங்களினால் பெரும்பாலும் பாதிக்கப்படும் மக்கள், தென்னாட்டைச் சேர்ந்த திராவிடப் பெருங்குடி மக்களேயாவர்.

திரைகடலோடி திரவியந்தேட பர்மாவுக்கு வந்த மக்கள், தாயகத்தில் வாழும் மனையாளுக்கு மட்டும் ரூ. 30 அனுப்புவதற்குப் படும்பாடு, அப்பப்பா, நினைக்கவே மனம் கூசுகிறது. மேலும், தாயகம் சென்று திரும்பலாமென்றாலோ, சென்னை—இரங்கூன் நேரடிக் கப்பல் போக்குவரத்து இல்லை! தாயகம் செல்லும் மக்கள் வடநாடு சென்று, சென்னை செல்லவேண்டியுள்ளது. இந்நிலையில், தாயகம் சென்று திரும்பிவரும் வரை பர்மிய அரசாங்கம் ஒரு பிரயாணிக்கு அனுமதிக்கும் தொகை ரூ. 100 மட்டுமே! இந்தச் சொற்ப தொகையை வைத்துக்கொண்டு, தாயகம் சென்று, திரும்பி பர்மாவிற்கு வரதாக வேண்டும். சென்னை—இரங்கூன் கப்பல் போக்குவரத்து இருந்தாலாவது ஏதோ கொஞ்சம் நலமாக இருக்கும்.

கடல் கடந்த தென்னாட்டு மக்களின் நிலை இவ்வளவு இழிவாக இருந்துவருகிறது. இது குறித்துப் பொதுவாக மத்திய அரசாங்கமோ, ஆசியாவின் ஜோதி நேரு பெருமானோ கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை! அவர்களுக்குத்தான் அந்த எண்ணமில்லை—அவர்கள் வடவர்கள்—தமிழர்கள் மீது கவனம் இருக்காது. சென்னை அரசாங்கமும் பச்சைத்தமிழர் காமராசரும் இத்திக்கில் கவனம் செலுத்தாதது ஏன்? இனிமேலாவது கவனம் செலுத்துவார்களா?

இப்பிரச்சினை குறித்தும், பர்மா வாழ் தமிழர்களின் துயர் குறித்தும் தி. மு. கழகம் கவனம் செலுத்தி, மும்முறை, கழக தின ஏடு 'நம் நாடு' இதழில் தலையங்கங்கள் தீட்டி மத்திய அரசாங்கத்துக்கும், சென்னை அரசாங்கத்துக்கும், தமிழகத்து மக்களுக்கும், கடல் கடந்த பர்மா வாழ் திராவிட மக்களின் துயரை எடுத்துரைத்திருப்பதை, கடல் கடந்த நாங்கள் என்றும் மறக்க இயலாது—மறக்கவும்மாட்டோம்!

இனியேனும், கடல் கடந்த பர்மா வாழ் திராவிட மக்கள்பால் மத்திய அரசாங்கமும்—சென்னை அரசாங்கமும் கண்ணோட்டம் செலுத்தி, பர்மாவாழ் கடல் கடந்த திராவிடரினத்தின் துயரைத் துடைக்க முற்படுவார்களா? இல்லை, முன்போல் மௌனம்தான் பதிலா?

கடல் கடந்த
விருதை-வீரமணி,
இரங்கூன்—பர்மா

சேலம் நகர வாக்காளர்களுக்கு :

★

"1957-ம் ஆண்டு திருத்தப்பட்ட பூர்வாங்க சேலம் நகர வாக்காளர் பட்டியல், டிசம்பர் 9-ந் தேதியிலிருந்து இரண்டு வாரங்கட்கு பொதுமக்களின் பார்வைக்காக தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் (தாலுகா ஆபீஸ்) வைக்கப்படும். கிளைக் கழகச் செயலாளர்கள் தங்கள் வட்டத்தின் குறைகளை தேர்தல் ஆணையாளரிடம் கூறி திருத்தம் பெறலாம்"

வந்தார், ஆனால்.....!

பண்டிதர், சனியன்று பகல் 12-45 மணிக்கு மீனம்பாக்கம் வந்து சேர்ந்தார்; ஆனால் வழக்கமாக உடன்வரும் திருமதி இந்திரா காந்தி வரவில்லை.

படம் பிடித்துக்கொண்டார்

விமான நிலையத்திலேயே, 'ஷெரீப்' திருமதி கிளப்வாலா ஜதாவ் கேட்டுக் கொண்டதற்கிணங்க, பண்டிதர், மேயர் திருமதி தாராசெரியன், மந்திரி திருமதி லூர்தம்மாள் சைமன், ஷெரீப் திருமதி கிளப்வாலா ஜதாவ் ஆகியோருடன் நின்று படம் பிடித்துக் கொண்டார்.

ராஜபவனத்தில்

விமானக்கூடத்தில் கவர்னரும், முதல்வரும் தந்த வரவேற்பைப் பெற்றுக்கொண்டு பண்டிதர், நேராக ராஜபவத்திற்கு சென்று விருந்துண்டு ஓய்வு பெற்றுக் கொண்டார்.

ஸ்டேடியத்தில்

சரியாக 3-40 மணிக்கு ராஜ பவனம் விட்டு அவர், திறந்த காரில் ஸ்டேடியம் நோக்கிப் புறப்பட்டார். வழிநெடுக அவர் எதிர்பார்த்திருக்கக்கூடிய அளவு கூட்டம் இருக்காவிடினும், ஆங்காங்கே மக்கள் நின்றிருந்தனர்.

4-மணிக்கு ஸ்டேடியம் சேர்ந்த அவருக்கு, உத்தரவின்பேரில் அழைத்து வரப்பட்டிருந்த மாணவ—மாணவியர் வரவேற்புத் தந்தனர். அணிவகுப்பு கண்டுவிட்டுப் பேசத் துவங்கினர், பண்டிதர்.

பேசவில்லை

துவங்கியதுமே மாணவர்கள், 'பேச்சு கேட்கவில்லை' என்பதாகக் குரல் எழுப்பினர்; நிறுத்தி நிறுத்தி, 'அமைதியாயிருங்கள்; பேசுவது கேட்கும்' எனத் திரும்பத் திரும்ப அவர் சொல்லியும், மாணவர்கள் கேட்கவில்லை, எனவே, பேசாமல், மீண்டும் ஒரு முறை மாணவர்களைப் பார்த்துவிட்டு, குறித்த நேரத்திற்கு முன்பாகவே கீழ்ப்பாக்கம் புறப்பட்டார்.

கீழ்ப்பாக்கத்தில்

கீழ்ப்பாக்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பண்டிதர், தமது வழக்கமான உபதேசங்களை வழங்கினர். 'தொழிலாளர் கூட்டம்' என்று அறிவிக்கப்பட்டிருந்தது' 'எதைப் பற்றிப் பேசட்டும்' என்று தனக்குத்தானே கேள்வி போட்டுக்கொண்டு, 'எல்லாவற்றையும் பற்றிப் பேசுகிறேன' எனத் துவங்கி, தொழிலாளர்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்ற உபதேசத்தைக் குறைவின்றி வழங்கினர். அத்துடனில்லாது, 'தேசத் துரோகம், பைத்தியக்காரத்தனம்' இவற்றிற்கெல்லாம், கீழ்ப்பாக்க மேடையில் பண்டிதர் சில புதிய வியாக்கியானங்களை, மிக்க உணர்ச்சி வயப்பட்டு அளித்திருக்கிறார்.

குழந்தைகளுக்கு தியேட்டர்

மவுண்ட்ரோடில் புதிதாகக் கட்டப்பட்டு இப்போது காலி செய்யப்பட்டுவிட்ட சட்டசபைக் கட்டிடத்தை, குழந்தைகளுக்கான சினிமா தியேட்டராக ஆக்கினர், சென்னை சர்க்கார்; அதனை, மேஜையிலிருந்த பொம்மையைத் தூக்கி, திறந்துவைத்து, குதுகலித்திருக்கிறார், பண்டிதர்!

புறப்பட்டார்

இத்தனை நிகழ்ச்சிகளையும் முடித்துக்கொண்ட அவர், ராஜ பவனத்தில் விருந்துண்டு விட்டு, கிண்டி இரயில் நிலையம் சென்று, அங்கிருந்து விசேட இரயில் ஒன்றுமூலம் திண்டுக்கல்லுக்குப் புறப்பட்டார். அவருடன், வழக்கமான பரிவாரங்கள் அத்தனையும் சென்றிருக்கின்றன.

சென்னை நிகழ்ச்சிகள் அத்தனையிலும் முதன்மந்திரி காமராசர் மந்திரிகள் சுப்பிரமணியம், பக்தவத்சலம் ஆகியோரும் மிகுந்த உற்சாகத்துடன் கலந்துகொண்டிருக்கின்றனர். தங்கள் எஜமானரின் முகத்தில் பூக்கும் புன்னகையில், தங்கள் தங்கள் பங்கு எவ்வளவு என்பதைக் கணக்கிட்டுக்கொள்ள இவர்கள் தவறவில்லை.

கல்வித்துறைக் காவலர்களின் கவலை !

கல்கத்தா, டிச. 9—

கல்வி நிலை உயர ஆசிரியர் நிலை உயர வேண்டும் என்று நாட்டின் தலைவர்கள் குரலெழுப்பி வருகின்றனர்; ஆசிரியர்களின் நிலை உயர்த்தப்படவேண்டும் என்று பண்டித நேருவும், காங்கிரஸ் பேரவைத் தலைவர் ஸ்ரீமந் நாராயணனும் கூறியுள்ளனர்; ஆனால் நாட்டில் இதற்கு நேர்மாறான சம்பவங்கள் நடைபெறுகின்றன.

மேற்கு வங்கத்தில் உள்ள 3,000 ஆசிரியர்கள் தங்களுக்குத் தரப்படும் ஊதியம் போதவில்லை என்று அரசாங்கத்திடம் முறையிட்டுவந்துள்ளனர்.

ஊதிய உயர்வு பெற விரும்பும் ஆசிரியர்கள் பொது ஊழியக் குழு முன் 'வாய் மொழி'ப் பரீட்சைக்கு சென்று தேர்வு பெறவேண்டும் என்று அரசாங்கம் இப்போது உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த ஏற்பாட்டை எதிர்த்து ஆசிரியர்கள் ஊர்வலமாக சட்டமன்றத்தின் அருகில் சென்றனராம்; ஆனால் போலீசார், அவர்களைத் தடுத்து நிறுத்திவிட்டனராம். ஆசிரியர்கள் சாலையில் அமர்ந்து மறியல் செய்துள்ளனர்.

பிறகு, ஒரு சில சட்டமன்ற உறுப்பினர்கள் ஆசிரியர்களுக்கு அளித்த வாக்குறுதியின் பேரில் அவர்கள் கலைந்து சென்றனராம்.

பிர்லா குழுவினர் கும்மாளம்!

புதுடில்லி, டிச. 9—

"வெளிநாடுகளில் இந்திய வர்த்தகர்கள் தேவையான கடன் தொகையைப் பெறலாம் இங்கே நாம் எவ்வளவு மூலதனம் திரட்ட முடிகிறது என்பதைப் பொறுத்து நிச்சயம் உதவி கிடைக்கும்" என்று சமீபத்தில் வடநாட்டுத் தொழில் அதிபர் பிர்லா தலைமையில், அமெரிக்கா, கானடா, ஜெர்மனி ஆகிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்த குழு, தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

சிதம்பரம் வட்டத்தில் அண்ணா

டிச. 23, 24-ந் தேதிகளில் சிதம்பரம் வட்டத்தைச் சார்ந்த பழைய நல்லூர், ஸ்ரீமுஷ்ணம் ஆகிய ஊர்களில் நடைபெறும் பொதுக் கூட்டங்களில் அண்ணா சொற்பொழிவாற்றுவார். அண்ணா அவர்களுடன் தோழர் தில்லை-வில்லாளன் அவர்களும் கலந்து கொள்வார்.

திருக்குறள் வகுப்பு

11—12—57 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டை, முருகேச முதலித் தெரு, 2-ம் எண்ணுள்ள கட்டடத்தில் மணவழகர் மன்றச் சார்பில், 'திருக்குறள் வகுப்பு' புலவர் கா. தி. நவக்கோட்டி அவர்களால் நடத்தப்பெறும்.

24,000 முறை இரயில் நிறுத்தம்!

புதுடில்லி, டிச. 9—

1957-ம் ஆண்டு ஜூலை திங்கள் வரை மொத்தம் 24,000 முறை. ஓடும் இரயில்கள், 'அபாயச் சங்கிலி'யை இழுப்பதின் மூலம் நிறுத்தப்பட்டுள்ளனவாம்.

இந்தக் குற்றத்தில் ஈடுபட்டவர்களை இரயில்வே பிரயாணிகள் பிடித்துக்கொடுக்கவில்லை என்று பொதுமக்கள்மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்தியாவில் 13 நிமிடங்களுக்கு ஒருமுறை, எங்காவது இரயில் நிறுத்தப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது.

வாழ்க்கைத்தரப் புள்ளி உயர்வு

சென்னை, டிச. 9—

சென்னை நகரத்தில் தொழிலாளர் வாழ்க்கைத் தரப் புள்ளி 374-லிருந்து 390-ஆக—16 புள்ளிகள் நவம்பர் திங்கள் இறுதியில் உயர்ந்துள்ளது.

சென்னை — இராயப்பேட்டையில்

இந்தி எதிர்ப்பு கூட்டம்

அண்ணா கலந்து கொள்வார்

10—12—57 மாலை 6 மணிக்கு சென்னை—இராயப்பேட்டை, சீனிவாசபுரம் 2-வது தெருவில் முத்தமிழ் முன்னேற்ற மன்றச் சார்பில் தோழர் மோ இராசாராம் தலைமையில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெறும். அண்ணா அவர்களும், தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., கோ. இளவரசு, சு. லோகநாதன் ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர். டேப் இராதாமாணிக்கம் இன்னிசையுண்டு.

சட்டக் கல்லூரி தி.மு.க.-மாணவர்கிளை

துவக்க விழா

13—12—57 மாலை 6 மணிக்கு சென்னை கோகலேமண்டபத்தில்

தலைவர்: வை. சுந்தரமூர்த்தி

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்
கே. ஏ. மதியழகன் (ஆங்கிலத்தில்)
தில்லை-வில்லாளன்
டி. கே. பொன்னுவேலு

கட்டணம் இல்லை

நீலகிரி வட்டத்தில்

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

டிச. 10: பகல் 2 மணி-குன்னூர்
மாலை 5 மணி—நான்சச்
11: மாலை 4 மணி—குந்தை
12: மாலை 4 மணி-சோலூர்

நீலகிரி தோட்டத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுக் கூட்டங்களிலும், கழகக் கூட்டங்களிலும் கலந்துகொள்வார்.

தில்லை-வில்லாளன்

நிகழ்ச்சிகள்

டிச. 13: சென்னை தி. மு. கழக மாணவர்கிளை கூட்டம்
19: வைடிப்பாகம்
23: பழையநல்லூர்
24: ஸ்ரீமுஷ்ணம்

க. அன்பழகன்

எம்.எல்.ஏ., சுற்றுப்பயணம்

டிச. 9: இராசசிங்கமங்கலம்
10: போடிநாயக்கனூர்
மாலை 3-மணி—உயர்நிலைப் பள்ளிமாணவர் மன்றம்
6 மணி—கழகப் பொதுக்கூட்டம்
11: கூடலூர்
12: வடுகப்பட்டி (மதுரை)
13: 4 மணி—காம்பக்குடி
$6\frac{1}{2}$ மணி—சந்தர்வக் கோட்டை
14: சென்னை—பெரியமெட்டு
15: காலை 10 மணி—சென்னை அச்சுத் தொழிலாளர் நிதிக்கு பாரகனில் படக்காட்சி
மாலை—ஆப்பூர்
16: சென்னை—சோமனீஸ் வரன்பேட்டை
20, 21, 23: சேலம் மாவட்டம்

ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றம்

10—12—57 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு சென்னை—எஸ்பிளனேடு ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தில், தோழர் வ. ஜெயராமன் தலைமையில், திரு. எஸ். எஸ். இராமசாமி 'செயற்கைச் சந்திரன்' என்பது பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத் துணைச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

நேரில் ஆங்கிலம் கற்பிப்பதற்கெனப் பிரத்தியேகமாக சென்னையில் ஏற்பட்டிருக்கிற மாபெருங் கல்வி அரங்கம்

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே — மண்ணடி — சென்னை-1.

★

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

அடிப்படையிலிருந்து இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

வசதிப்படி காலையிலோ மாலையிலோ வகுப்பிற்கு வந்து ஒரு மணி நேரம் படித்தால் போதுமானது

தாயின் மடியில் தவழும் குழந்தை ஒரு வருடத்திற்குள் ஒரு மொழியைப் பேசக் கற்கிறது என்றால், பல்லாண்டு அனுபவங்களைத் தாங்கி நிற்கும் நம்மால் ஏன் முடியாது என்று எங்கள் கல்வி நிலையம் கேட்கிறது

சென்ற வருட டிசம்பர் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த டிசம்பரில் முடிவடைகின்றன

புதிய வகுப்புகள் ஆரம்பம்: நாளை

வகுப்பில்சேர விண்ணப்பம் செய்துகொள்ள கடைசி நாள்: இன்று

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்து கொள்க.

கல்வி நிலையம் எல்லா நேரங்களிலும் திறந்திருக்கும்.

முக்கிய அறிவிப்பு: 16 வயதுக்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்பில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்